[திரு. எ.வ. வேலு] [2020 செப்டம்பர் 16

கடைகளுக்கெல்லாம் அதிக வரி கொடுக்க வேண்டும்; வாடகை தர வேண்டும்; சொத்து வரி கொடுக்க வேண்டுமென்று அரசு அலுவலர்கள் நிர்பந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிற கடைகளுக்கு வாடகையையும், அதேபோன்று நகராட்சிகளுக்கு சம்பந்தப்பட்டிருக்கிற கடைகளினுடைய வாடகையையும் இரத்து செய்து கொடுத்தால் அது வாழ்வாதாரத்தை இழந்திருக்கிற வாடகைதாரர்களுக்கு, அவர்கள் பிழைப்பு நடத்துவதற்கு வகையாக இருக்கும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2021 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 153 முதல் 171 வரையிலான 19 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் மூன்று முக்கிய நிதிக் குழுக்களில் ஒன்றான பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக இரண்டாவது முறையாக எனக்கு வாய்ப்பளித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையிலே குழுவின் தலைவராக நீங்கள் என்னை

2020 செப்டம்பர் 16] [திரு. S. செம்மலை]

நியமித்ததற்கு உங்களுக்கும் நன்றி தெரிவித்து, தங்களுடைய மேலான அனுமதியோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2021 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய 120 முதல் 136 வரையிலான 17 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

பிற்பகல் 1–30

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவராக மீண்டும் என்னை நியமனம் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய உங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை புலப்படுத்திக் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2021 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 78–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எனக்கு 2–00 மணிக்குள் எல்லாவற்றையும் முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு முடியட்டும், உட்காருங்கள், பிறகு பார்க்கலாம். (குறுக்கீடுகள்) பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் உறுதியெல்லாம் தர முடியாது, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பார்க்கலாம். (குறுக்கீடுகள்) பார்க்கலாம், நேரம் இல்லை அல்லவா? (குறுக்கீடுகள்) 2–00 மணிக்குள் நிதியொதுக்கச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, நேரம் இல்லை. அதையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்கெல்லாம் உறுதியெல்லாம் சொல்ல முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*